கட்டுவதற்கும், அதுபோன்ற செயல்களைத்தான் செய்ய முடியும் டபில்யூ. பி.ஆர்.சி.பி. என்ற திட்டத்தின் கீழே. ஆனால் இப்பொழுது மத்திய அரசு கொடுத்திருக்கின்ற திட்டத்தின் கீழேதான் இந்தக் கண்மாய்களைச் சீரமைக்க பணம் கேட்டிருக்கிறோம். அது உலக வங்கி அனுமதி பெற்று பணம் வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகும். இப்பொழுது, மாநில அரசு நிதியாதாரங்களை வைத்து செய்யக்கூடிய பணிகளைச் செய்கிறோம். அதற்கு அவர் எழுத்து மூலம் தந்தால் முன்னுரிமை கொடுத்து சில பணிகள் எடுத்து அவர் தொகுதியிலே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 346, திரு ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

346—

விக்கிரமசிங்கபுரம் பாபநாசம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து திருவனந்தபுரம் செல்ல நெடுஞ்சாலை அமைத்தல்.

20460*—*திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், விக்கிரமசிங்கபுரம் பாபநாசம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டங்கள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பாபநாச மலையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு செல்லும் சாலை மிகவும் முக்கியமானச் சாலை. நான் சட்டமன்ற உறுப்பினரான காலத்திலேயிருந்து, மூன்று ஆண்டுகாலத்திலே நான் பல தடவை இந்த மன்றத்திலே நினைவுபடுத்தியிருக்கிறேன். இதற்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும், இந்தச் சாலைப் பற்றி, அதைக் கண்டிப்பாகப் போட வேண்டுமென்ற முறையிலே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள்.

1994 ஏப்ரல் 22]

வேண்டுகோள் வைத்து அரசாங்கத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். என்ன காரணம் என்று சொன்னால், இன்றைய தினம் தமிழகத்திலிருந்து, அதாவது திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் செல்ல வேண்டுமென்றால், நாகர்கோவில், கன்னியாகுமரி வழியாகச் செல்ல வேண்டும். இல்லையென்றால், செங்கோட்டை வழியாக திருவனந்தபுரத்திற்குச் செல்ல வேண்டும். பாபநாசம் மலையிலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர்தான் இருக்கிறது. 30 கிலோ மீட்டரில் ஒரு 10 கிலோ மீட்டர்தான் நாம் ரோடு போட வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறது. ஏனென்றால், ஏற்கெனவே கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் அந்தக் காலத்திலே வனத்துறையினால் போடப்பட்ட சாலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையினுடைய முக்கியம் கருதி, இந்தச் சாலையை ஏதாவது ஒரு நிதியிலே ஏற்பாடு செய்து, இந்தச் சாலையை அமைத்தால் நலமாக இருக்கும். மேலும், இன்றையதினம் விலைவாசி உயர்ந்து வருகிறது. இந்த நேரத்தில் டீசல் விலை, பெட்ரோல் விலை இவற்றையெல்லாம் மிச்சப்படுத்தக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை, இந்த ஆண்டிலேயே செய்து தருவாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற முண்டந்துறை ரேன்ஜ் காரையார் மார்கமாக திருவனந்தபுரம் செல்கின்ற சாலையினுடைய நீளம் 32 கிலோ மீட்டர். இது மேற்கு தொடர்ச்சி மலை வழியாகச் செல்கின்ற காரணத்தினாலே வனத்துறையினுடைய அனுமதியும் நாம் பெற வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவாகும் என்று அதற்கான மதிப்பீடு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல் வெறும் 10 கிலோ மீட்டர் போட்டால் போக்குவரத்து செய்ய முடியாது. ஏற்கெனவே, இருக்கிற சாலையை வைத்துக்கொண்டு அதிலே பஸ்சுகளையோ, லாரிகளையோ ஓட்ட முடியாது. 32 கிலோ மீட்டர் முழுவதும் அந்தச் சாலையைப் போட்டால்தான், முழுமையாக அதைச் செயல்படுத்தினால்தான் அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறினால்தான், போக்குவரத்துக்கு வசதியாக ஏதுவாக இருக்கும். ஆகவே, அதற்கு 5 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டத்திற்கு ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்குவதற்கு வாய்ப்புக்கள் இல்லை: மலைத் தொடர் திட்டத்தின் கீழே. ஆகவே இவ்வளவு பெரியத் தொகையை ஒரு ஆண்டு காலத்திலே அரசு செலவழிப்பது என்பது இயலாத காரியம். வேறு மாற்றுப் பாதை இருக்கின்ற காரணத்தினாலே இப்படிப்பட்டப் பணிகளை நாம் முன்னுரிமை கொடுத்து எடுப்பதில்லை. ஏனென்றால், இருக்கின்ற சாலைகளைப் பராமரிப்பதற்கே நம்மிடத்தில் நிதியாதாரங்கள்

இருக்கின்றபோது, புதியத் திட்டங்களை 5 கோடி, 6 கோடி அளவிலே செலவழிப்பதற்கு அரசிடம் நிதிநிலை, வாய்ப்புத் தரவில்லை. அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்று சொன்னேன். எதாவது சிறப்பு அடிப்படையிலே நிதிகள் வருமானால், அது சம்ந்தமாக அரசு பரிசிலிக்கும், அது சம்பந்தமாக ஆய்வு செய்யப்படும். ஆனால், தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசுக்கு நிதிக் கஷ்டம் இருப்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட, உலக வங்கியிடமிருந்து நிதிகளைப் பெற்று இந்தச் சாலையை அமைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருந்தால், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், இந்தச் சாலையை அமைத்துக் கொடுத்தால், அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள மக்கள் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அனைவருக்கும் அது பயனுள்ள வகையிலே அமையும். எந்த நிதி நெருக்கடி இருந்தாலும்கூட ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவி கிடைத்தால் அதன் மூலமாக, இந்தச் சாலையை, வருகிறகாலத்தில் செய்து தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல், இந்த மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டத்திலேதான் இதை எடுத்துச் செய்ய முடியும். அதற்குத்தான் நிதியாதாரங்கள் மிகக் குறைவாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறேன். சிறப்பு நிதித் திட்டத்தின் கீழே ஏதாவது ஒதுக்கீடுகள் வருமானால், அது சம்பந்தமாக இந்த அரசு பரிசீலிக்கும், இது சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்வதற்கு அரசு அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. அவர்கள் அதற்கான மதிப்பீடுகளைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். நிதி வருகின்றபோது, ஏதாவது ஒரு திட்டத்திலே சேர்ந்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 347, திரு. எம்.ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

347—

கோயம்பேடு மார்க்கெட் திட்டத்தில் ஒதுக்கீடு செய்தல்

***10353**—திரு. எம். ஆண்டி அம்பலம்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—